<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு  நீதிபதி.</u>

எ.ம.சா.1 தேதி. 07.08.2025

| MCOP. No. | 7/2020 | | |
|---|---|---|---|
| பெயர் | சந்தியா | த/பெ, | கோவிந்தராஜீலு |
| வயது | 33 | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த மனுவில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது. 10.05.2021 அன்று 1ம் எதிர்மனுதாரருக்கும், அவரது ஓட்டுநர் பிரபாகரனுக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு **எ.ம.சா.ஆ.1.** மேற்படி அறிவிப்பினை 1ம் எதிர்மனுதாரர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் அட்டை **எ.ம.சா.ஆ.2.** அவருடைய ஓட்டுநர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை **எ.ம.சா.ஆ.3.** 07.04.2019 தேதியிட்ட இறந்த நபர் ஓட்டிச் சென்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையின் நகல் **எ.ம.சா.ஆ.4.**

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்தில் பாதிக்கப்பட்ட நபர் எங்கள் நிறுவனத்தை பொறுத்து 3ம் நபர் என்றால் சரிதான். காப்பீடு விதிமுறைகள் என்பது உரிமையாளருக்கும், காப்பீட்டு நிறுவனத்திற்கும் உள்ள ஒப்பந்த பிரச்சனை என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணம் எங்களிடம் காப்பீடு செய்யப்பட்ட டாடா ஏசி ஓட்டுநர் மீதுதான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த விபத்திற்கு மனுதாரரின் பங்களிப்பு இல்லை என்றால் சரியல்ல. மனுதாரர் 3ம் நபர் என்பதால் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.